கடவுள் துணை.


# வேளாளன், தூத்துக்குடி.

ஆசிரியன்:— மு. பொன்னம்பலம்.

வயது 1]  1104-ளு சுக்ல-௵ ஆனி 8-உ  [மாதம் 3


"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கிவிட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

---

## சமூக நலனும் சமய நம்பிக்கையும்.

"திருக்கோவிலில்லாத திருவிலூரும்
திருவெண்ணீரணியாத திருவிலூரும்
............அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே."

நம் நாட்டில் நம் சமூகம் மிக உன்னத நிலைமையிலிருந்தது அரசியல் துறையில் அமைச்சர் போர்வீரர் முதலிய உயரிய பதவிகளையும் அரசருக்கு முடிசூட்டும் பூபதிகளாயும், உழவு தொழிலில் உயரிய உழைப்பால் ஊதியம்பெற்றவர்களாயும் வியாபாரம் கைத்தொழில்களில் கைதேர்ந்தவர்களாயும் சிவ நெறியிலும் தமிழ்மொழியிலும் சீரும் சிறப்பும் பெற்றவர்களாயும் வாழ்ந்தனர். சுருங்கச் சொன்னால் அறம் வளர்த்த அம்மையார் ஆன்மாக்களின் நலக்கரு

தி ஆண்டவனிடத்துப் பெற்ற இருநாழி நெல்லை உலக மக்களுக்கு உதவும்படி நம்மிடமே நல்கினர். நூல் இயற்ற முதல்வனால் முதலடி எடுத்துக்கொடுக்கக் கலைமகள் நின்று கைநீட்டிக் கொடுக்கப் பெற்றவர்கள் நம்மவர்களே. வாசி தீர்த்த காசு வாங்கிய வள்ளல் நம்மவரே. இன்னும் எழுதுவதனால் இடம் போதாது. அன்றியும் பழம் பெருமை பேசுவதில் பயனொன்றுமில்லை.

என்றாலும் பழையநிலைமையின் பான்மையையும், தற்காலநிலைமையின் தகைமையையும் சீர்தூக்கிப்பார்த்தால்தான் நமது வாழ்க்கையைச் செம்மைபெறச்செய்ய முற்படுவோம். தற்பொழுது நம்மக்கள் நம் நிலையை நன்கு உணர்ந்துவருகின்றனர். எப்பக்கங்களிலும் நம் நிலைமை கவலைக்கிடமானதாகக் கருதப்படுகிறது. விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளில் முயற்சி இல்லாமல் முற்கால நிலைமையை இழந்தோம். ஆகையால் அவைகள் அனைத்தையும் அடிப்படை நோக்கமாகக்கொண்டு முன்னேற்றமடையவேண்டுமென்றும் சிறிது வேலைசெய்ய முன்வந்திருக்கின்றோம்.

முற்காலத்தில் முன்னேற்ற மடைந்து முதன்மை பெற்று வாழ்ந்த நாம் தற்காலத்தில் தாழ்ந்துவருவதன் காரணத்தை நுட்பமாக ஆராய்தல் அவசியம். தொழில்த் துறைகளை கைவிட்டதும் ஒற்றுமைக் குறைவும், பொறாமைக் குணமும் இவைபோல்வன பிறபல காரணங்களிருந்தாலும் முக்கிய காரணம் முதல்வனிடத்து முழுப் பற்றில்லாமையேயாகும். அஃதாவது கடவுளிடத்து நம்பிக்கையும் சமயப்பற்றும் சமயக் கல்வியுமில்லாமையே யாகும். ஆண்டவன் அருளின்றி அணுவும் அசையாதாகலால் ஒரு பெருஞ் சமூகத்தின் நிலை எவ்விதம் அசைந்து மாறுதலடையும். அருள் நிறைந்த ஆண்டவன் அசைத்தாலன்றி அசையாது, இத்தகைய நம்பிக்கை நம் மக்களுக்கு நாளடைவில் நலிந்து வருகின்றது. ஆகையால்த்தான் நாமும் நலிந்து வருகின்றோம்.

உலகில் உயரிய சமூகம் நம் சமூகம். உயரிய மொழி நம் தமிழ்மொழி, உயரிய சமயம் நம் சைவசமயமும் வைணவ சமயமுமாகிய ஹிந்து மதம். இதனை மறுக்க யாராலும் இயலாது

ஆனால் இக்காலத்தில் யாவராலும் எளிதாக இகழப்பெறுவது நம் சமூகமும், நம்மொழியும், நம் சமயமுமேயாகும். காரணம் என்னவென்றால் நம் சமூக மக்களே இகழப்படுகின்ற பிறமக்களுக்கு இடங்கொடுத்தலுமன்றி ஏற்றுக்கொண்டு ஏவலுஞ் செய்கின்றனர். நம் சமயத்தில் அமைந்திருக்கும் கொள்கைகளில் ஆலயங்கள், அதில் நிகழும் திருவிழாக்கள், விபூதி, உத்திராக்கம் முதலிய அடிப்படையான அரிய பெரிய அடையாளங்களை அலட்சியஞ்செய்து அகற்றிவிட வேண்டுமென்கின்றனர். ஆலயங்களும், திருவிழாக்களும், சமய அடையாளங்களும், சமயச் சடங்குகளும் அமையாத சமயம் எது? ஒன்றுமே இல்லை. கிறிஸ்தவ மதத்தினர்களுக்கும் ஆலயங்களும் திருவிழாக்களும் சிலுவைக் குறிகளும் அமைந்திருக்கின்றன. சிலுவையை அணிந்துகொள்ளும் கிறிஸ்தவர்கள் பெரும்பகுதியினரை நாம் பார்க்கின்றோம். வாரம் ஒருமுறையாவது ஆண் பெண் அனைவரும் ஆலயஞ்சென்றுவருகின்றனர். மகமதியர்களுக்கும் பள்ளிவாசல் என்றுள்ள பெயரால் ஆலயமும் சிற்சில திருவிழாக்களும் சுன்னத்து மொட்டையிட்டுத் தொப்பி போடுதல் முதலிய சமய அடையாளங்களும் அமைந்திருக்கின்றன. இவ்விரு மதத்தினர்களில் சமய அடையாளங்களை அனுட்டியாத மக்கள் பெரும்பாலுமில்லை. அப்படிக் கிருக்க நம் சமய அடையாளங்களையும் ஆலயங்களையும் அவமதிப்பது அக்கிரமமேயாகும். அந்தோ! சைவசமயத்தின் வைணவசமயத்தின் பெருமையைப் பேசவும் முடியுமோ? பெருமைபொருந்திய சைவசமயத்தை அனுட்டித்த பெருமக்களாகிய நம் மக்களுக்கன்றோ சமயப் பெயராகிய சைவத்தின் சார்பாக சைவர் என்று பெயர் வந்தது. இன்னும சைவர் என்பது சைவ சமயத்தைச் சார்ந்த பிறமக்களையும் குறிப்பினும் சிறப்பாகச் சைவர் என்பது வேளாளராகிய நம்மையே குறிக்கும் சமயப்பெயரால் சமூகப்பெயர்பெற்ற வேறு சமூகமே கிடையாது ஏனென்றால் சமயத்தில் மிகுந்த நம்பிக்கையும் சிறந்த பற்றுமுடையவர்களாக நம்மக்கள் வாழ்ந்ததேயாகும். சமயப் பற்றுடன் வாழ்ந்த நாம் சகல துறைகளிலும் ஒப்பாருமமிக்காரும் இன்றி உயரிய நிலையிலிருந்து வாழ்ந்தோம். தற்காலத்தில் சமயத்தில் நம்

மாறித் தவிக்கின்றோம்.

ஆகையால் நம் சமூகமக்கள் சகல துறைகளிலும் சரிவர நலன்பெறவேண்டுமானால் சமயக்கொள்கையை சரிவரக் கையாளு தல் கடமையாகும். இல்லாதவரையில் எத்துறையில் என்னபாடு பட்டாலும் உயரிய நிலையடைதல் ஒருபொழுதும் ஒவ்வாது. கா காலச்சக்கரம் மாறுபட்டுச் சுழலும் இவ்வேளையில் சமயக்கொள் கையே சமூக வளர்ச்சிக்குச் சாதகமென்று சாற்றும் நம்மை நகை யாடி நடித்துக் கேலிசெய்பவர் பலர்; எனினும் உண்மையைக் கூற ஒருபொழுதும் நாம் பின்னடையோம். நம்மக்களில் ஆன்ற கல்வியும் அடைதற்கு அரிய அறிவும் பெற்ற பெரியோர் சிலர் இன்னும் இதனை வலியுறுத்துகின்றனர். சுருங்கச் சொல்லின் நமது பத்திரிகாலயத் திறப்பு விழாத் தலைவர்-திருவாளர் ஆ. சங்க ரலிங்கக் கவிராயரவர்கள் திறப்பு விழாவின்போது பேசியதே போதிய சான்றாகும். நம்மக்களுக்கு அன்னிய நாட்டு அறிவு அதி கரிக்க அதிகரிக்க அநாகரிகக் கொள்கைகள் அதிகரிக்கின்றன கட்டுப்பாடு இல்லாத கொள்கைகள் கைக்கொள்ளப்படுமானால் கட்டுக்கடங்காத கவலையுறுவது தவிர வேறில்லை. கட்டுப்பாடுடன் கூடிய வாழ்க்கையே கண்ணியம் நிறைந்த வாழ்க்கையாகும். நம் சமூக வாழ்க்கையும் நம் சமய வாழ்க்கையும் கட்டுப்பாடுடன் இருந்தன. அவைகளை அவிழ்க்க அநேகர் ஆர்ப்பாட்டஞ்செய்கின் றனர்.

ஆகையால் நம் சமூக மக்கள் சாக்கிரதையாக சமயக் கொள் கையை கையாண்டும் வேறு பிறபல துறைகளில் வேலை செய்தும் முன்னேற்றமடைய முயல்வார்களாக. முழுமுதற் கடவுள் முன் னின்று அருளுவாருக.

---

சந்தாநேயர்களே! தங்கள் சந்தாத்தொகைகளை இனியேனும் தாமதியாமல் மணியார்டர் மூலம் அனுப்பி ஆதரியுங்கள். வி. பி. பி. யில் அனுப்புதல் அணு மூன்று அணுவசியச் செலவு தங்களுக்கு ஏற்படுகிறது.

# எத்தொழில் சிறந்தது?

இலங்கை: திருவாளர் சீ. முருகையாபிள்ளை யவர்கள்

(முன்தொடர்ச்சி.)

உழவு குலத்தொழிலே யென்று ஈடுபட்டுச்செய்யப் பலருக்கு ஆசையிருப்பினும் உடல் வன்மை யின்மையால் முடியாதிருககின்றது.

காலப்போக்கிலிவைகளைச் சிந்தித்துச் செயலாற்றுவாரில்லை. மேலும் தற்காலமே எச்சாதியாயிருந்து எத்தொழில் செய்பவராயிருந்தாலும், ஆட்சியின் மாறுதலுக்கேற்ப ஆங்கிலங் கற்கவும் அதன் வழிப்பட்ட செய்கைகளைச் செய்யவும் அரசாங்க உத்தியோக மேற்கவுமே யலைந்து திரிகின்றனர்.

இதற்குரிய சாதனமோ அநுகூலமோ கிடைக்கப் பெறாதவர்கள் பொருளீட்ட வேறு முயற்சியிலிறங்குகின்றனர். முயற்சியில் பெரும் பொருளீட்ட லொன்றையே குறியாகக்கொண்டு நியதியின்றி பல்வேறு தொழிலையும் செய்கின்றனரே தவிர எத்தொழில் சிறந்தது, தீதின்றி வந்த பொருள்தானே அறத்தையு மின்பத்தையுந் தந்து நிற்குமெனக் கருதி மக்களுக்குபகாரமாகிய வேளாண்மைத் தொழிலை யாதரியாதிருந்து வருகின்றனர். இன்னும் நாம் நமது கடமையை யுணர்ந்து நமது தொழிலை யியன்றவாறெல்லாம் ஆதரித்துவரப் பின் வாங்குவோமேயானால் நமது பின் சந்ததியாரின் நன்னெறி வாழ்க்கைக்கு நாமே தீமையைத் தேடிவைத்தவர்களாவோம். உபகாரக்குணமே நமது சமுகத்திற்குரிய சிறப்பு அதற்குரிய முயற்சியின்றி நாம் உலகோபகாரியாயிருத்தல் முடியாது.

"தாளாண்மை யென்னுந் தகைமைக் கட்டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு"

என்பது தேவர் திருவாக்கு. இதனை உற்று நோக்கியொழுகுவோமாக. நமது முயற்சி முட்டின்றி நடைபெறவும் அதனை நடத்துதற்குரிய திறனையும் எல்லாம் வல்ல இறைவன் தந்தருளிப் பாதுகாப்பானாக.

# — பாவம். —

திருவாளர்: திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள்
நவசக்தி ஆசிரியர்.

(முன் தொடர்ச்சி)

மனிதன் பாவத்தினின்றும் விலக அடிக்கடி கூடுமானால் இடையறாது ஆண்டவனைப் பலவழியிலும் போற்றிய வண்ணமாயிருத்தல்வேண்டும். மனிதன் கடவுள் திருவருளைக்கொழுகொம்பாகக்கொண்டு தான் ஆற்றும் பாவங்கருதி வருந்தி வருந்தி அழஅழப் பாவ நீக்கமும் அவ்விடத்தில் திருவருட் பதிவும் நிகழ்ந்துகொண்டேபோகும். ஒருவன் அறியாமையால் ஆற்றும் பாவங்கருதி ஆண்டவனை நோக்கிக் கசிந்து கசிந்து உண்மையாக உருகுவானாயின், அவன் மீண்டும் அப்பாவம் நிகழ்த்த ஒருப்படான். அவ்வாற்றலைக் கடவுள் அருள் நல்குகிறது. ஆதலால் கடவுள் நெறியே பாவ நீக்கத்துக்குரிய செந்நெறியாகும். கடவுளைத் தொழுதல்போல் நடித்துக்கொண்டு பழிபாவங்கள் செய்துவரும் வஞ்ச நெஞ்சினர் பேச்சே ஈண்டு வேண்டாம். மனிதன் பாவத்துக் கெளியன் என்பது உண்மை. எளியன் எளியன் என்று பாவத்தையே செய்வோன் விலங்கினத்தில் சேர்ந்துவிடுவான். மனிதன் தன்பாலுள்ள எளிமையை மனந்திரும்புதலால், ஆண்டவன் அருள்நாடிவருந்துவதால் போக்க முயலல்வேண்டும். இம் முயற்சியின்றி வாழ்வோன் மனிதனாகான்.

பாவத்தையுணர்ந்து மீண்டும்பாவஞ்செய்ய விடாத திருவருள் நெறி நிற்போர்வழி அரசு நடைபெறின், அவ்வழியுலகமும் இயங்கும். அரசு அமைப்பு மக்கள் நிலையைப்பொறுத்து நிற்கிறது. நன் மக்கள் வாழும் ஊரில் நல்லரசு நிலவுதலியல்பு. மக்கள் பழி பாவங்களுக்கு அஞ்சும் வழியில் நின்றொழுகல்வேண்டும். அவ்வழியே கடவுள் வழி என்பது. பாவமில்லாக் கடவுளைப் பாவிபோற்றினால் பாவங்கழியப் பெறுவன்.

தற்கால உலகில் பாவம் எவ்வெவ் வழியில் பரவுகிறது என்ப தை நினைக்கும்போது உள்ளம் நடுங்குகிறது. ஆ! ஆ! எத்துணை வழியில் பாழும் பாவம் பரவுகிறது. அதற்கேற்ற கல்வி அதற் கேற்ற வழக்க ஒழுக்கங்கள் பரவிவருகின்றன. பாவத்தை யொ ழிக்கும் முறையாங் கடவுள் நெறி நிற்பதில் பேர்பெற்ற இந்தியா வும் தனது நிலையினின்றும் பிறழ்ந்து நிற்க நேர்ந்திருக்கிறது. பா வத்தைப் போக்கவந்த மனிதன் இங்குப் பாவத்தில் அழுந்துவத ன் கொடுமையை என்னென்று சொல்வது? கடவுள் நினைவும், கடவுள் வழிபாடும், கடவுளைப் பாடும் முறையுமே வாழ்வாகப் பரி ணமித்திருந்த நாடா பாவத்துக்கிரையாவது? இயந்திர வாழ்வும் வக்கீல் தொழிலும், வயிற்றுப் படிப்பும் பாவத்தை வளர்க்காது பின்னை எதை வளர்க்கும்? நாட்டைத் திருத்தி நல்வழிப்படுத்த ஒத்துழையாமை தோன்றிற்று, அதுவும் பாவத்தால் விழுங்கப்பட் டது. ஒத்துழையாமையின் ஒடுக்கம் நாட்டின் பாவப்பெருக்கைப் புலப்படுத்தவில்லையோ?

பாவத்தைப் போக்கும் வழியைக் கடைப்பிடித்தொழுக வே ண்டுமானால் நாட்டுக்கல்வி, சமயப்பற்று முதலியவற்றை உயிர்ப் பித்தல் வேண்டும். நிர்மாண வேலை யென்று சொல்லப்படுவது காங்கரஸ் குறிக்கும் வேலை மாத்திரமன்று. மற்றும் பல வேலைக ளையும் நாம் கூட்டிக்கொள்ளலாம். நமது நீதி நூல்களை-அற ஒழுக்க நூல்களை-அன்பு நூல்களைப் படிக்க வேண்டாமென்று காங்கரஸ் கூறுமோ? காங்கரஸ் தொண்டர் ஒவ்வொருவரும் திருக்குறள் படித்தலாகாதோ? பாவத்துக்கு அஞ்சும் அறிவு பெறுதற்கு உழைக்குந் தொண்டாற்றத் தொண்டர்கள் முயலல் வேண்டும்.

மக்கள் உள்ளத்தில் அன்பு இரக்கம் ஈகை முதலிய நறுங் குணங்கள் பெருகப் பெருகப் பாவ எழுச்சிதானே ஒடுங்கிப்போய் விடும். அக்குணப் பேற்றிற்கு அருள்வடிவாய் ஆண்டவன் வழி பாட்டைவிட வேறொன்றிருப்பதாக எமக்குத் தெரியவில்லை. மனி தன் பாவத்தைக் குறித்துக்கழிவிரக்கமுற், மீண்டும் அப்பாவ

எண்ணந் தோன்றுதவாறு காக்கத் திருவருள் நாட்டமும் பெற முயலல் வேண்டும். ஒருவன் தான்செய்யும் பாவங்குறித்து ஆண்டவனை நோக்கி அழுதால் அவன் அருள்செய்யானோ? பாவத்தை மன்னித்து அருள்புரிய ஆண்டவனிருக்கிறான். அஃதே அவன் வேலை. இங்கே சிலர் பாவத்தைஆற்றிக்கொண்டே கடவுளை நோக்கி அழுதுகொண்டே இருந்தால் பாவங் கழன்றுவிடுமோ என்று கேட்கலாம். அறியாமையால் செய்யும் பாவங்குறித்து வருந்து மனமுடையான் மீண்டும் அப்பாவம் செய்ய ஒருப்படான். பாவங் குறித்து வருந்தல் என்பதன் நுட்பத்தை உணர்வோர்க்கு எவ் வித ஐயமும் நிகழாது. ஈண்டுப் பெரியோர் திருவாக்குகளிற் சில எடுத்துக் காட்டுகிறேன்.

"இரும்பு நெஞ்ச வஞ்சனேனை ஆண்டுகொண்டநின்ன தாள்",
"யானே பொய் என்னெஞ்சும் பொய் என்னன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதா லுன்னைப்பெறலாமே.
"இல்லை நின்கழற் கன்பதென்கணே
ஏலுமேலு நற்குழலி பங்கனே"
"கல்லைமென் கனியாக்கும் விச்சைகொண்டு
என்னை நின்கழற் கன்பனாக்கினாய்
எல்லையில்லை நின்கருணை"
"கல்லாமனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனை"
"ஏசினும் யானுன்னை யேத்தினும்
என் பிழைக்கே குழைந்து
வேசறுவேனை விடுதிகண்டாய்"
"வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினா லாண்டுகொண்ட
அன்னந் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்"
"பேயேனதுள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனே"
"கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக்
கருணையினால் நிற்பானை"

"வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை
நின் பெருமையினால் பொறுப்பவனே"
"வம்பனேன் தன்னை ஆண்ட மாமணியே"
"அஞ்சினேன் நாயேன ஆண்டுநீயளித்த
அருளினை மருளினால மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருளபுரிவாயே"
"பொய்மமையே பெருககிப் பொழுதினைச் சுருக்கும்
புழுததலைப புலையனேன் தனககுச
செமமையே யாய சிவபதமளிதத
செலவமே சிவபெருமானே"
"இருமபுதரு மனததேனை ஈர்த்து ஈர்த்து என்
என்புருக்கிக கருமபுதரு சுவை எனககுக காட்டினை"
—மாணிக்கவாசகர்.

பாவத்தை அழிகக வலலது கடவுள நெறியொன்றே. கடவுள் முனனிலையில பாவததை வெளியிடும ஆணமைக குணம மனிதன பெறலவேணடும.

---

# வேளாளரின் வகையும் பெருமையும்.

---

திருவாவடுதுறை யாதீனச சைவப பிரசாரகர்,
திருவாளர் பொ முத்தையபிள்ளையவர்கள்

ஏவலாளரைககொண்டு பூமியை உழசசெயது உணடு வாழப வரும, தாமே உழுது உணடு வாழ்பவருமென வேளாளர் இரு வகையினராவர். தொலகாபபியததில உழுவித துண் வேளாளர், உழுதுணவேளாளரென நசசினாாககினியரும, சேககிழார் புராணததில இருமைநெறி வேளாளரென ஸ்ரீ உமாபதி சிவாசாரியருங்கூறியவாற்றால, வேளாளர் இருவகையினரெனபது நனகு விளஙகும

அறுபத்துமூன்று நாயன்மாருள் வேளாளர் பதின்மூவர். இவருள் மூர்க்க நாயனர், செருத்துணையார், கோட்புலியார், சத்தி நாயனர், அரிவாட்டாயனர் அப்பர், சாக்கியர், மானக்கஞ்சாறர், விறன்மிண்டர், முனையடுவார், ஏயர்கோன்கலிக்காமர் ஆகிய பதினொருவரும் உழுவித்துண் வேளாளர். வாயிலார், இளையான்குடி மாறனர் ஆகிய இருவரும் உழுதுண் வேளாளர். அவரவர் புராணங்களில் சேக்கிழார் கூறும் அடைமொழிகளால் இவ்வேறுபாடு இனிது விளங்கும்.

இவ்விருவருள், உழுவித்துண் வேளாளர், போர் வீரராயும் மந்திரியாயும், சிற்றரசராயும் வாழ்ந்தன ரென்பது பெரியபுராணம் முதலிய நூல்களால் விளங்கக்கிடக்கின்றது. உழுதுண் வேளாளர், உழுதற்றொழிலேயன்றி பண்டம் மாற்று முதலிய வேறு பல தொழில்களையும் உடையராயிருந்தனர். இக்காலத்தும் உழுவித்துண் வேளாளர், மந்திரியாயும், போர்வீரராயும் (போலீஷ் உயர்தர உத்தியோகம்) பூமியின் சிறு பகுதியை ஆளும் கலெக்டராயும் நீதிபதியாயும், சிற்றரசராயும் (ஜமீன்) வாழ்கின்றன ரென்பதும் பிரபல வியாபாரிகளாய் வாழ்கின்றன ரென்பதும் கண்கூடு. (பிரத்தியக்ஷம்)

எவ்வாற்றானும் நேரேயோ, ஏவலரைக்கொண்டோ உழுதல் உரிமை வேளாளருக்கே உரியதென்பது மறுக்கமுடியாதது. ஏனையோருக்கு இருக்குமாயின் வேளாளரிடமிருந்து பெற்றுக்கொண்டதாகும். உமாதேவியார் உலகத்திலுள்ள உயிர்களின் நலம் கருதி இறைவனிடத்துப் பெற்ற இருநாழிநெல்லை, விருத்திசெய்து உயிர்களுக்கு உபகரிக்கும்படி வேளாளரிடமே கொடுத்தனர். அதனால் உழுதற்றொழில் வேளாளருக்கே உரிமையாயிற்று. அந்தணர், அரனைப் பூசித்தற்கு மாத்திரம் உரியர். வணிகர், பண்டமாற்றுக்கு மாத்திரம் உரியர். வேளாளர், அரனைப் பூசித்தற்கும், பகைவரைக் கடிந்து உயிர்களைக் காத்தற்கும், பண்டமாற்றுச் செய்தற்கும் பொதுவாகவும், உழுதற்றொழிற்குச் சிறப்பாகவும் உரிமையுடைய ரென்பது கருதியே அம்மையார் இவர்களிடம் இருநாழி நெல்லைக் கொடுத்தனர்.

உழுதற்றொழிலால் இருநாழி நெல்லைப்பெருக்குதற்கு மழை இன்றியமையாது வேண்டப்படும். மழை பெய்தற்கு இறைவன் திருவருள் வேண்டும். திருவருள் உண்டாதற்கு இறைவனை வழிபடல்வேண்டும். வழிபாடு நிலைபெறுதற்கு உயிர்களிடத்துக் கருணையும், வாய்மையும், தீவினைக்கு அஞ்சி அடங்குதலும் வேண்டும். ஆகவே, உழுதற்றொழிலை மேற்கொள்ளும் வேளாளர், இவை பணைத்திற்கும் உரியரென்பது பெறப்படும்.

## தெய்வ வழிபாடு.

வேளாளர்கள் சிவபெருமானையே முழுமுதற்கடவுளாகக்கொண்டு வழிபடும் சிறப்பு வாய்ந்தவர்கள். ஆதலால் இவர்கள் சைவரெனவும் அழைக்கப்படுவர். சைவம் என்பதன் பொருள் சிவசம்பந்தம் என்பதாம். சிவனை வழிபடுகின்ற அந்தணரல்லாத ஏனைய வகுப்பினரும் பொதுவாகச் சைவரே எனினும், சிவபெருமானைப் போல் உயிர்கள் மீதுவைத்த கருணையால் இயல்பாகவே புலாலுண்ணாது சிவபெருமானை வழிபடும் வேளாளரே சிறப்பாகச் சைவரெனப்படுவர். இக்கருத்துப்பற்றியே ஆசிரியர் சேக்கிழார், "மெய்யன்புடைய சைவரெனப் பாரினிகழ்ந்த செருத்துணையார்" என்றனர். செருத்துணையார்-வேளாளர். சிவவழிபாடுசெய்யும் அந்தணர், ஆதிசைவரும் மகாசைவருமாவர். அடைமொழியின்றிச்சைவரெனப்படுவோர் வேளாளரே. இக்காலத்தும் சைவரென்பது வேளாளவகுப்பிற்குரிய பெயராய் உலகவழக்கிலிருப்பது அனைவரும்அறிந்ததொன்று. இதனால் சிவவழிபாடிருந்து சீவகாருண்யம் இல்லையாயினும், பௌத்தரைப்போல் சீவகாருண்யமிருந்து சிவவழிபாடு இல்லையாயினும் சைவராகாரென்பதும், சிவவழிபாடும் சீவகாருண்யமும் உடையவரே சைவராவரென்பதும் பெறப்படும். இவ்விரண்டும் இயல்பாக உடையவர் வேளாளர்.

சைவத்திற்கும் வைணவத்திற்கும் இக்காலத்தில் சிலரிடத்திருக்கும் பகைமை ஒருசிறிதும் முற்காலத்தி லொருவரிடத்துங் கிடையாது. இக்காலத்தும் உண்மைச் சைவவைணவர்களிடத்துக் கிடையாது. சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக்கொண்

டசைவர்கள், ஆத்மார்த்த இஷ்டதெய்வமாக சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், தக்ஷிணாமூர்த்தி முதலிய மூர்த்திகளை வழிபடுவது போல், விஷ்ணுவையும் வழிபடுவர். சிவாலயத்தில் விஷ்ணு இருப்பதும், சிவபூசையில் விஷ்ணு பூசிக்கப்படுவதும், சைவர்கட்கு விஷ்ணு வழிபாடு உரியதென்பதை வலியுறுத்தும். "திருமாலுக் கடிமைசெய்" என்றனர் நமது மூதாட்டியாராகிய ஔவைப் பிராட்டியாரும். ஆகவே, வேளாளருட்சிலர் விஷ்ணு வழிபாடு உடையராய் முற்காலத்து இருந்தனர். இக்காலத்தும் இருக்கின்றனர். அவர்களும் சைவரேயாவர்.

## உழவின் சிறப்பு.

வேளாளர், வயலில் உழுது நட்ட முடி திருந்தின், பாராளும் மன்னர் மலிமுடி திருந்தும். வேளாளர் சிறுகோலால் ஏரைச்செலுத்திப் பாரையாண்டால், அரசர் செங்கோலால் நீதியைச் செலுத்தி உலகத்தைபாள்வர். சுருங்கச் சொல்லுமிடத்து, சிவமெனும் பொருளும் ஆதி சத்தியோடு சேரின் எத்தொழிலும் வல்லதாம்; இவள் பிரிந்திடில் இயங்குதற்கும் அரிது அரிது என்று வேதம் இயம்புமாறுபோல, வேளாளர் உழுதற்றொழிலைச்செய்யின் செய்யிப்பின் அந்தணர் முதலிய அனைவருந் தொழிற்படுவர், இன்றேல் ஒருவருந் தொழிற்படாரென்க. "உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம், விட்டேமென் பார்க்கு நிலை." என்றனர் நாயனார்.

## வள்ளற்றன்மை.

அந்தணர், அரசர், வணிகரென்னும் மூவருங் கொடுத்தற்றொழிலுடையரேனும் வாங்குதற்றொழிலும் உடையராவர். அந்தணர் தானமாக வாங்குவர். அரசர் இறை (வரி)யாக வாங்குவர். வணிகர் பண்டமாற்றுவழியாக வாங்குவர். வேளாளர் மாத்திரம் பிறரிடத்து வாங்குதலின்றிக் கொடுத்தற்றொழிலொன்றே உடையர். பிறரை இரவாது இரப்பார்க்கு ஈபவன்தான் வள்ளலெனப்படுவன். பிறரொருவருக்குமின்றி வேளாளருக்கு மாத்திரம் உரித்தாயது வள்ளற்றன்மையே. ஆகலினாற்றான், "வேளாளரென்பவர்கள் வள்ளாண்மையால் மிக்கிருக்குந் தாளாளர்" என்றருளிச்செய்தனர்

திருஞான சம்பந்த சுவாமிகள். "இரவார் இரப்பார்க் கொன்றீவர் கரவாது, கைசெய்தூண் மாலையவர்." என்றனர் திருவள்ளுவரும்.

புகழுக்குரிய தன்மைகள் பல இருப்பினும், இறப்பவர்கு ஈதலாகிய வள்ளற்றன்மையே சிறப்பாகப்புகழப்படும். " உரைப்பார் உரைப்பவையெல்லாம் இரப்பார்க்கொன், றீவார்மே னிற்கும் புகழ்." என்றனர் தேவர். இந்த வள்ளற்றன்மை வேளாளருக்கே சிறப்பாயிருத்தல் பற்றி "வேளாளர் பெருமை யெம்மால் பிரித்து அளவிட்டு இவ்வளவெனப் பேசலாமோ." என்றனர் ஸ்ரீ உமாபதி சிவாசாரியர்.

பெருஞ் சிறப்பு.

வேளாருக்குரிய இத்துணை பெருமைக்கும், உமாதேவியாரால் இருநாழி நெல்தரப் பெற்றதே காரணமாகும். ஆகையால், செய்ந்நன்றி யறியுந் திறனுடைய வேளாளர் வள்ளற்றன்மையில் மாத்திரமன்றி சிவவழிபாட்டினும் பெருஞ் சிறப்புப்பெற்றனர். சந்தான ஆசிரியர் நால்வருள் முதன்மையான ஸ்ரீ மெய்கண்டதேவர் நடுநாட்டு வேளாளர். சமயாசாரியருள் ஸ்ரீ அப்பர் சுவாமிகளும் நடுநாட்டுவேளாளர். பெரியபுராணம் செய்தருளிய ஸ்ரீ சேக்கிழார் நாயனார் தொண்டைநாட்டு வேளாளர். அறுபத்துமூன்று நாயன்மார்களுள் பதின்மூவராகிய வேளாளரில் பலர் சோழநாட்டு வேளாளர். சைவ சித்தாந்தத்தின் உண்மைப் பொருளை ஐயவிபரீதமின்றித் தெரிந்துகொள்ளுதற்பொருட்டு, சிவஞான போதச் சிற்றுரையும், சிவஞான பாடியமும், சிவஞானசித்தியார் பொழிப்புரையும் செய்தருளிய ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகளும், குமரன் திருவருள் பெற்று ஸ்ரீ காசியில் முகமதிய அரசரை வசஞ்செய்து சைவத்தின் பெருமையை விளக்கிய ஸ்ரீ குமர குருபர சுவாமிகளும் பாண்டி நாட்டில் திருநெல்வேலிச் சில்லாவிலுள்ள வேளாளர். சைவாதீன குருமூர்த்திகள் அனைவரும் வேளாளரே.

ஆசாரம்.

இத்தகைய வேளாளரது ஆசாரத்தையும் சிறிது ஆராய்வாம். இவர்கள் முதலியார், செட்டியார், தேசிகர் என்னும் பட்டங்களை

உடையாராய் அனைவரும் உடனிருந்துண்ணும் திறனுடையார். ஏனைய வகுப்பினரோடு உடனிருந்துண்ணுதலில்லை. மேற்கூறிய பட்டங்களைப் புதிதாய்ச் சூட்டிக்கொண்டவரோடும் உடனிருந்துண்ணுதலில்லை. உண்மைத் துறவிகளிடத்து வகுப்பு வேற்றுமையைப் பாராட்டமாட்டார். ஸ்நானம், சந்தியாவந்தனம், சிவாலய வழிபாடு, சிவபுராண பாராயணம் முதலியவற்றை நியமமாகச்செய்துவருவர்.

### செய்யத் தக்கவை.

இத்துணைப் பெருமைவாய்ந்த வேளாளரின் நிலை தற்காலத்தில் பலவகையாலும் மாறியிருத்தலால், அம்மாறுதலை மாற்றி, சிவதீக்ஷை பெற்று சந்தியாவந்தனஞ்செய்தல், சிவவழிபாடுசெய்தல் சிவசாஸ்திரம் பயிலல், உழுதற்றொழிலை நேராகவோ ஏவலரைக்கொண்டோ விருத்திசெய்தல், வஞ்சனை பொய் களவு முதலிய குற்றங்களின்றிப் பொருளீட்டல், வறியார்க்குக் கொடுத்து மகிழ்தல், பெரியாரைப் பேணிப்பணிதல் முதலிய நல்ல செயல்களைச் செய்து முன்னேற்றம் அடைவார்களாக. அவ்வண்ணம் திருவருள் துணைபுரிவதாக.

---

## வேளாளர் நிலைமை.

திருவாளர்: இ. வெண்ணிமாலைபிள்ளை அவர்கள், B.A., B.L.

---

இப்பொருளை ஆய்வதின் நோக்கம் வேளாள வகுப்பினர் எவ்வாறு உலக வாழ்க்கையில் உயர்ச்சியடையலாம் என்பதை ஆராய்வதன் பொருட்டு என்னுள்ளெழுந்த அவாவே.

தமிழ் மக்களுள் வேளாள மரபினர் பண்டைக்காலத்தில் எல்லாவகையிலும் சிறப்புற்று வாழ்ந்திருக்கிறார்கள். உன்னத உலக வாழ்க்கைக்கமைந்த பலவித வாழ்க்கைத்துறைகளிலும் அவர்கள் இறங்கி அவைகளில் தங்கள் புகழையும் நாட்டியிருந்திருக்கிறார்கள். உழவும் வணிகமுமே அநேகமாய் அவர்களின் சிறப்பாய வாழ்

க்கை நெறிகளாயிருந்திருப்பினும் எனையத்துறைகளிலும் அவர்கள் சென்று சிறப்புற்று விளங்கி வந்திருக்கிறார்கள். தானைத்தலைவர்களாயும் புலவர்களாயும் அமைச்சர்களாயும் அவர்கள் அமைந்திருந்துள்ளார் என்பதை நாம் சரித்திரவாயிலாக அறிகிறோம். நம் திருநெல்வேலி தளவாய் முதலியாரவர்கள் குடும்பமே வேளாளர் சேனாதிபதிகளாயிருந்துள்ளார் என்பதற்குச் சான்றன்றோ. அவர்கள் புலமைக்குச் சான்றும்வேண்டுமோ? குமரகுருபரரென்ன, சேக்கிழாரென்ன, ஆழ்வாரென்ன இன்னும் இன்னோரை யொத்தவும் பிறவுமான புலவர் பெருமான்கள் வேளாண் மரபினன்றோ தோன்றினவர்கள். நந்தமிழ் நாட்டரசர்களில் சிலருக்கு முடிசூட்டும் உரிமையே வேளாளர் பெற்றிருந்தார்களென்றுகூட அறிகிறோம். இவர்களில் அமைச்சர்களாயமைந்து உயர்ச்சி பெற்றார் அநேகர். பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் ஒரு ஆங்கிலேயத் தளகர்த்தன் ஒருவன் சூழ்ச்சியினால் திருச்சிராப்பள்ளிக்குப் பக்கம் நயவஞ்சகமாய்ப் பிடிபட்டபொழுது அவருடனிருந்த அமைச்சர் சுப்பிரமணிய பிள்ளையாலன்றோ ஈஸ்ட் இந்தியகம்பேனியார் பின்னர் நடத்தியவிசாரணையில் பாளையக்காரரைப் பெரிதும்பாராட்டி அவருடைய நட்பைக்கோரி அவருக்குஇருபக்கமும் கூர்மையுள்ள விலையுயர்ந்தவாளையும், பரிசாக அளித்தார்கள். என்னை? பாளையக்காரர் கம்பேனியாருக்குக் கப்பங்கட்டாது பலஆண்டுகளாக சுயேச்சையாய் ஆண்டுவந்தார். கம்பேனித்தளகர்த்தன் ஒருவன் இவருடைய வலியைஎப்படியுமடக்கநினைத்தான். நயவஞ்சகமாய் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து வெகு தூரத்திலிருக்கும்திருச்சிராப்பள்ளிப் பக்கம் ஏதோ தான்இரகசியம் பேசவேண்டுவதாய்த் தனியேவரும்படி பாளையக்காரரைஅழைத்தான். நம்பினர் பாளையக்காரர் சுப்பிரமணியபிள்ளையுடன்சென்றார். ஆங்கிலேயன் ஒருமேடையிலிருந்துகொண்டு மேடைக்குப்போகும்வழியில் படிக்குப்படி சிப்பாய்களைக் கள்ளத்தனமாய் வைத்திருந்தான். இதறியாது இருவரும மேடைக்குச் சென்றார்கள். மேடையையடைந்ததும் சிப்பாய்கள் வெளிக்கிளம்பினார்கள். இருவரும் திகைத்தார்கள். எனினும் வீரரானபாளையக்காரர் அஞ்சாது தன்கையிலிருந்த ஒரே வாளைக்கொண்டு அங்கிருந்த சிப்பாய்களில் அநேகரைத்துணித்தார். எவ்வளவுவீரராயிருப்

பினும் ஒருவர்வலி அநேகர் நடுவில்லெல்லுமாறு பாளையக்காரர்பிடிப ட்டார். நடந்த அமரில் சுப்பிரமணியபிள்ளை தப்பிப்போய் ஈஸ்ட்இந் தியா கம்பேனியாரிடம் தன் பாளையக்காரர் சுத்தவீரரென்றும்ஆங் கிலத்தளகர்த்தன் நயவஞ்சகமாய்ச் சூழ்ச்சிசெய்தானென்றும்பிறவு மாய் முறையிட்டார். கம்பேனியார் விசாரணைவைத்தார்கள். விசா ரணையில் சுப்பிரமணியபிள்ளை பாளையக்காரருக்காக அஞ்சாநெஞ் சையும், அவருடைய பெருந்தன்மையையும், உயர்குடிப்பிறப்பை யும், தக்கபடி எடுத்துக்காட்டி வாதித்தார். கம்பேனியார் விசார ணைப்பொழுது ஒருசந்தர்ப்பத்தில் "என்ன அவ்வளவு சிப்பாய்க ளையும், உங்கள்பாளையக்காரர் ஒருவரே தனித்தார்? என்றுபிள்ளை யைவினவ, அதற்குஅவரும் பின்னும்தனிப்பதற்கு சிப்பாய்களி ன்மையினால் எங்கள்கோன் கொல்லாதொழிந்தார்' என்றனராம். இத்தகைய சொல்வன்மையினால் கம்பேனியாருக்குப் பாளையக் காரர் கபடமில்லாத சுத்தவீரனென்றும் தங்கள்தளகர்த்தன் செய் கைசரியல்லவென்றும் புலப்பட்டது. வீரரைமெச்சி அவருக்குச் சன்மானங்களுஞ் செய்தனுப்பினார்கள். இதுதான் பாளையக்காரர் வழியைச் சேர்ந்த ஓர் புலவரிடமிருந்து கேட்டது.

இத்தகைய மொய்ம்பினராய் வாழ்ந்து வந்த பண்டைக்காலத் திய வேளாளர் இல்வாழ்வானுக்குரிய அறங்களெல்லாவற்றையும் முறையே செயத்தகும் மாண்பினராயிருந்திருக்கிறார்கள். கடைச் சங்கக்காலத்துத் தமிழ்ச்சிற்றரச ரொருவரிடம் அமைச்சராயிருந்த பெருமாள் முதலியார், அரசர் ஒரு முறை அரசு அவையில் இல் வாழ்வானுக்கு ஏற்பட்ட பல அறங்களையும் செய்துவருபவர்யாவர் என வினவ, ஏனையோரெல்லோரும் யோசித்து நிற்க ஐயப்பா டொன்றுமில்லாது வேளாளரே அத்தன்மைத்தரென அறைந்தார். அக்கூற்று அவருக்குக் கூற்றுவனைப் முடிந்தது. அவர் சொல்லை ப் பொறுதவனாய் அரசன் அவர் தலையைக் கொய்யுமாறு விதித்தா ன் முதலியார் இறப்பினும் என்? பின் நடப்பு அவர் உரையின் உ ண்மையை உலகத்தாருக்கே விளக்கிற்றென்னலாம். எங்ஙனே? சின்னாட்களில் மாற்றரசன் படையெடுத்து வந்தான். அரசகுமார னே உயிர் தப்பிப்பிழைக்க வேண்டியதாயிற்று. நெருக்கடியில்,

பெருமாள் முதலியார் இறந்து அவர் மகன் வசிக்கும் மாளிகையி லேயே அரசகுமாரன் அபயங்கேட்டு வந்தான். கொடுத்தேன் என் றார் இளைய முதலியார். அரசகுமாரனை யாருக்குந் தெரியாத விடத் தில் ஒளித்து வைத்தார். அவ்வமயம் அவர் மனதில் முன்னைய நட ப்புகள் ஏதாவது தோன்றினவா? இவன் தந்தை என்தந்தையைக் கொன்றவராச்சுதே என்று ஏதாவதெண்ணினாரா? இல்லை. 'இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்து விடல்' இல்வாழ் வானுக்குரிய அறநெறிகளில் சிறப்பாயுதன்றோ! அது வேளாளர் கடைப்பிடிக்கும் அறமன்றோ! முதலியார் மாற்றம் பொய்க்குமா? இனி இளையமுதலியார் அபயம் மட்டுமோ கொடுத் தார். மாற்றான்படை அரசகுமாரனைத்தேடி இளையமுதலியாரிட மே வந்தது. அரசகுமாரனைக் காட்டு என்று அப்படைஞர்கள் அ தட்ட அஞ்சாது அருகில் நின்ற தன் அருமைப்புதல்வனைக்காட்டி 'இதோ அரசகுமாரன் அவனைக்கொண்டுபோய் நீங்கள் என்னவே ண்டுமென்றாலுஞ் செய்யுங்கள் என்றார் இளையமுதலியார். படைஞ ர்கள் அவர் காட்டுமவன் அரசகுமாரனல்லனேயெனத் திகைத்தா ர்கள். அன்னான் முதலியார் மகனே யெனக் குறியாலுணர்ந்ததும் அரசகுமாரன் முதலியார் மனையுட்புகுந்ததை அவர்கள் நேரில் கண்டவர்களாதலால் முதலியாரின் உதாரகுணத்தைக் கண்டு ஆச் சரியப்பட்டார்கள். வீரனை வியவாதவீரரும் உண்டோ? மேல்நடந் தது கூறுமலே விளங்கும். இது சரித்திரத்துக்கென நண்பர் ஒருவர் வாயிலாகக் கேட்டேன்.

இனி இவர்களின் வள்ளற்றன்மையை இத்தமிழ் நாடுமுழுவ தும் அறியுமே. யாவரே வள்ளலெனப் பெயர்பெற்றார்? யானரே ஒப்புயர்வில் பாவரசனால் வள்ளலெனும் பாடலும்பெற்றார்? வேளா ளர் சடையப்பபிள்ளையன்றோ? கவிச்சக்கரவர்த்தி கம்பன் அன்னாரையன் றோ வள்ளலெனப் பாடினான். அந்தாதியும் அதற்கென இயற்றி னான். இதுமட்டுமோ அன்னாரின் மரபினரது ஈகையையே

"என்றுங்காப்பாரே வேளாளர்காண்" என்னுஞ் செய்யுளால் எக்காலத்தியர்க்குந் தெரியுமாறு எழுதியும்வைத்தான் அக்கவிக் காசு. ஒருமாடு கேட்டவனுக்கு ஒருமந்தை கொடுத்தால் என்னே

சடையப்பபிள்ளையின் வள்ளற்றன்மை! அவரைக்கம்பநாடன் சடையப்ப வள்ளலென்றதும் மிகையாகாதே.

இனி இவ்வேளாளரே தமிழ்கோவில்களுக்கும் ஏனைய அற நிலையங்களுக்கும் பெருந்துணையா யிருந்திருக்கிறார்கள். இது சிவ நெறிக்குரவர் சம்பந்தர் அருளிய

"வாளார்கண் செந்துவர்வாய் மாமலையான் றன் மடந்தை
தோளாகம் பாகமாப்புல்கினான் றொல்கோயில்
வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந்
தாளாளராக் கூறிற்றான் றோன்றிமாடமே"

என்னும்

திருப்பாசுரத்தால் தெரியக்கிடக்கிறது. இவர்கள் இன்னும் பொதுமக்கள் நன்மைக்காகச் செய்துள்ள ஏனையபணிகள் பல. அவை சொல்லில்மிகும். (தொடரும்)

# வேளாள மக்களும் வேலையில்லாத் திண்டாட்டமும்.

வேளாள விதேயன் விளம்புவது.

ஆதிகாலம் தொட்டு, நம் குலப்பெயர்க்குப் பொருத்தமாக நம் ஜாதித்தொழில் என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தொழில் விவசாயமே, நம்மவர்கள் சிறு பிராயமுதலே விவசாயத்தில் ஊக்கம் காட்டி விவசாய சம்மந்தமான சகல வேலையையும் செய்து வந்தார்கள். அநேக விவசாயிகள் வீடுகளில் ஏர் மாடுகள் முதலிய சாதனங்கள் இருந்துவந்தன. உழவு முதலிய தொழிலை தாங்களே செய்து, அதனால் நிலத்தை செவ்வையாய்ப் பண்படுத்தி, அதனால் அடையக்கூடிய பலனையும் அடைந்துவந்தார்கள். ஆனால் தற்காலத்திலுள்ள கல்விமுறை, நவீன போலி நாகரீகம், ஊக்கக்குறைவு வறுமை நிலைமை முதலிய பலவேறு காரணங்களால், நமது வே

ளாள மக்கள், விவசாய விஷயத்தில், ஊக்கம் காட்டாததோடு, உழவுமுதலிய வேலைகள் தாங்கள் செய்வது, கேவலமென்று போலி அந்தஸ்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். "கேவலம்" "அந்தஸ்துக்குறை" என்று சொல்லிக்கொண்டு அனேகமுக்கியகருமங்களையும், விசேஷமாக, ஜீவனோபாய கருமங்களையும் நம்மவர்கள் சரியாகச் செய்யாததினாலேயே நம்வகுப்பினர், நாளுக்குநாள் க்ஷீணதிசையடைந்து வருகின்றனர். முதலில் நம்மவர்கள் 'உழவு' தொழிலின் பெருமையை நன்குணர்ந்து சாதாரண விவசாயிகள் எல்லா விவசாய வேலைகளையும் முன்போல் தாங்கள் செய்ய முன்வர வேண்டும் பழய கால முறைப்படியே விவசாயம் செய்துவந்தால் நாம் முன்னேற்றமடைய முடியாது. மேல்நாட்டார், சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாய் ஒரு ஏக்கர் நிலத்தில் நாம் விளைவிக்கக்கூடிய மாகுலைவிட அதிகப்படியாய் விளைவிக்கக்கூடிய முறையைக் கையாண்டு பயன்பெற்று வருகிறார்கள். நாமும், சாஸ்திர ஆராய்ச்சியின் பயனாய் கிடைத்துள்ள புதிய முறைகளையும், நம்தேசத்திற்குத்தக்கபடி அனுசரித்துவரவேண்டும். வேளாளக்கூட்டுரவு விவசாயச்சங்கங்களும், (Co. operative Society for Agriculterits,) கோபாபரேடிவ் பாங்குகளும், அதிகப்படவேண்டும்.

இவ்வாறு விவசாயத்தைவிர்த்தி செய்யவேண்டுவது மிக்க அவசியமானபோதிலும், நிலமானது ஒருகுறிப்பிட்ட அளவுஉள்ளதாயிருப்பதாலும் எல்லோருக்கும் போதிய நிலம்கிடைப்பது கஷ்டமானபடியாலும், அநேகர் ஜீவனோபாயத்தின் பொருட்டும், தங்கள் செல்வநிலையை பெருக்கும்பொருட்டும், இதரதொழில்களையும் செய்துவர வேண்டியதாயிருக்கிறது, அந்நிலைமையில், நாம் மற்ற வகுப்பினரோடு போட்டிபோடவேண்டி வருகிறது. இந்தப்போட்டியில் நம்மவர்கள் வெற்றிபெறவேண்டுமானால் அதற்குத்தகுந்த படிப்பும், யோக்கியதையும், அவசியமாகின்றது. வேலைத்திறமையும் அவசியமாகின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. அதிலும் படித்தவர்களுக்குள்ளேயே இந்தத் திண்டாட்டம் அதிகமாகிவருகின்றது. அதிலும் நம்வேளாள மக்களுக்கு மிகுந்தகஷ்டம் ஏற்படுகின்றது. நம்மவர்களில்

அநேகர் படிப்பு, வேலைத்திறமை, யோக்கியதை, உள்ளவர்களா யிருந்தும், போதிய ஆதரவு, ஊக்கம் கிடைக்கப்பெற முடியாமல் முன்னேற்ற மடையாமலிருக்கிறார்கள். தனவந்தர்களான நம்வே ளாள முதலாளிமார்களும், வியாபாரிகளும், அநேக சிப்பந்திகளைத் தாங்கள் ஏகநேரிலும், தங்கள் சொல்வன்மையாலும், ஆதரவாலும், மற்றும்வழிகளிலும், நியமனம்செய்யக்கூடிய தனவான்களும், மற் றும் வேளாள அபிமானிகளும், வேளாளமக்களும், உதவிசெய்ய முன்வந்தால் நம்மவர்களுக்கு பேருதவியாயிருக்கும்.

இவ்விஷயமாய் வேளாளமக்களுக்கு உதவிசெய்ய ஆசைப்ப டும் தனவான்களுக்கு, வேலைக்குஆத்திரமும், தகுந்தயோக்கியதை யுமுடைய வேளாளர்கள் யார் யார் எந்தெந்தஇடங்களில் இருக் கிறார்கள், எனத்தெரிந்துகொள்ள வேண்டியவிஷயமும், வேளாள மக்களில் வேலைதேடுவோர்க்கு எந்தெந்தவேலைகள் எந்தெந்தஇட ங்களில் காலியாயிருக்கிறது என்கிற விஷயமும் தெரிந்திருக்க வேண்டியது முக்கியமானது. இந்த இரு திறத்தார்களையும் சம்பந் தப் படுத்தக்கூடிய ஒருஆபீஸ் நம்வேளாள சங்க ஆதரவின்கீழ் இருக்கவேண்டியது அத்யாவசியமானது.

இது விஷயத்தில் நம் "வேளாளன்" பத்திரிகையும் பேருதவி செய்ய இடமிருக்கிறது. நமது வேளாளனில் ஒருபகுதி "வேலை வேண்டும் வேளாளமக்கள்" என்றும் ஒருபகுதி "வேளாளமக்கள் வேலைக்குத் தேவை" என்றும், இரண்டுபகுதிகள் காணப்பட்டால் நான் மேற்சொல்லிய இருதிறத்தாரும் அதில் பிரசுரஞ்செய் யச் சாதகமாயிருக்கும். வேலைவிஷயமாயிருப்பதால் அநேகமக்கள் பிரசுரஞ்செய்வதானல் பத்திரிகையின் செலவினில் கஷ்டப்படும். ஆகவே அவ்வாறு செய்யும் பிரசுரங்களுக்கு ஏதாவது சொற்ப கட்டணம் அவசியமே. ஆனல் "வேலைக்கு ஆள்தேவை" என்று விளம்பரம் செய்கிறவர்கள் மிகச் சுருக்கமாகவும் வேலை தேவை என்று சொல்லக்கூடியவர்களே பெரும்பாலாருமாக இருப்பார்கள் என்பது சில இடங்களின் அனுபவமும், நாம் அறிந்துகொள்ளக் கூடிய விஷயமுமாகும். ஆதலினல். "வேளாள மக்கள் தேவை" என்று பிரசுரம்செய்யும், நண்பர்கள் கம்பனி முதலியவர்களுக்கு

அவர்கள் வேளாளனின் சந்தாதார்களாய் இருத்தல்வேண்டுமென்ற ஒரு நிபந்தனையைத்தவிர மற்றப்படி யாதொருவிதமான கட்டணம் தற்சமயம் கூடாது. ஆனால் வேலை வேண்டுமென்கிற வேளாள மக்கள் சந்தாதார்களாய் இருக்கவேண்டுமென்கிற நிபந்தனையோடு, சொற்பக் கட்டணம் கொடுக்கக்கூடிய வழியில் ஏற்பாடு செய்தால் உபகாரமாயிருக்கும். கால், அரை, முக்கால், ஒன்று, வருஷத்திற்கு இன்ன ரேட் என்றும், ஒரு பக்கம், அரை பக்கம், கால் பக்கம், இத்தனைவரி இவைகளுக்கு இன்ன ரேட் என்றும் ஏற்படுத்தலாம். அந்த விகிதமானது, பத்திரிகை நடத்தும் நண்பருக்கு லாபங்கருதாது, அச்சுக்கூலி, காகிதச்சிலவு, தபால்ச் சிலவு முதலியவைகளை மட்டும் தாங்கக்கூடிய வழியில் இருத்தல் அவசியம். வியாபார விளம்பர விகிதக்கட்டணம் இந்தப் பகுதிக்குக் கூடாது. இவ்வாறு செய்வது நம்மக்களுக்கு வேளாளன் செய்யும் ஒரு பெருந் தொண்டாகும்.

மேலும் அந்தந்த வருஷம் பி. ஏ., பி. எல்., வயித்தியப் பரீட்சை இன்ஜீனியர் பரீட்சை முதலிய பரீட்சைகளில், பரீட்சையில் தேர்ச்சியடையும் வேளாளமக்கள் ஜாபிதாவை மதருஸ், திருச்சி, சிதம்பரம், திருநெல்வேலி, மதுரை, முதலிய இடங்களில் நம்மாணவர்கள் உபாத்தியார் முதலிய தகுந்தவர்கள் மூலமாய் அறிந்து பிரசுரம் செய்தல் உபகாரமாயிருக்கும்.

நம்வேளாளன் ஆபிசோடு ஒரு இலவச வாசகசாலையும் ஏர்ப்பாடு செய்யமுடியுமானால் மிகவும் உபயோகமாயிருப்பதோடு பல சௌகரியங்களும் ஏற்படும். வேளாளன் பத்திரிகைக்கு மாற்றாக அனுப்புவதால் கிடைக்கக்கூடிய பத்திரிகைகளும், வேளாள பெருந்தகையாளர்களால் கொடுக்கக்கூடிய பத்திரிகைகளும் போதுமானது. அவ்விடத்திலுள்ள நோட்டீஸ் போர்டில் "வேலைக்கு வேளாளமக்கள்தேவை" என்கிற விளம்பரங்கள் குறித்த நபர்களால் அறிவிக்கப்படலாம். அவ்வாறு 'வேளாளன்' ஆபீசால் செய்ய மார்க்கமில்லாமல் போனாலும், புதிதாக நம் வாலிப நண்பர்களால் கூட்டப்பட்ட "வேளாள வாலிப சங்கத்தால்" அவ்வாற

ஒரு "வேளாளர் வாலிபசங்க இலவசவாசகசாலை"யையோ அல்லது வேளாளர் வாலிபசங்கத்தாருக்கு மட்டுமே உரித்தான வாசகசாலையோ ஏற்படுத்தலாம். அதற்கு நம் வேளாளன் பத்திரிகாசிரியர் பத்திரிகைகள் முதலிய நன்கொடையாலும் வாரப் பிரசுரங்கள் மூலமாயும் உதவிசெய்யலாம். அந்த இடத்தில் நோட்டீஸ் போர்டில் வேலை விஷயமான பிரசுரங்களைச் செய்யலாம்.

இவ்வாறு சிலவழிகளில் நமது வேளாளனும் அதன் உயரிய பத்திரிகாசிரியரும் நம்வேளாள மக்களுக்கு உயரியதொண்டை இயற்றலாம். இவைகளை நம் பத்திரிகாசிரியர் கவனிப்பார்களாக.

---

இப்பேருரை வரைந்தனுப்பிய அறிஞர் சமூக முன்னேற்றத்தில் அளவிலா ஆர்வமிருக்கும் அன்பர். இவ் அன்பர் தமது பெயரை வெளியிட மறுத்தெழுதியது குறித்து மனவருத்தமுற்று மாற்றுப்பெயர் அமைத்துள்ளோம். இவ் அன்பர்போன்ற அனேகர் முனைந்து வேலைசெய்ய முன்வந்தால் நம் முன்னேற்றம் விரைவில் கைகூடும். இவ் அன்பரின் மற்றொரு கட்டுரையும் கைக்கு வந்திருப்பதால் மறு இதழில் வெளியிடக் கருதியுள்ளோம். இக் கட்டுரையில் கண்டுள்ள கருத்துக்கள் கவனிப்பதற்குரியதே. ப-ர்.

---

# இந்தியாவின் செல்வம் விருத்தி யடைவதெப்படி?

---

[1915-ம் ஸு இறுதியில் நடைபெற்ற கைத்தொழில் மகாநாட்டில் ஸ்ரீமான் ஐ. பி. பாரேக் என்பவர்வாசித்த ஒரு கட்டுரையின் சாரம் வருமாறு:—

ஆசார விவகாரங்கள், அரசியல், பொருளாதாரம் முதலியவைகளில் முன்னேற்றமடைந்த பிறகே ஒரு தேசம் முற்போக்கானதேசம் என்று கருதப்படும். மேற்கூறப்பட்டவைகளில் ஒன்றில்

நாம் பின்னடைந்திருந்தோமானால் பிறவற்றிலும் பின்னடைந்தவர்களாகவே கருதப்படுவோம். மேற்கூறப்பட்ட மூன்றில் எது முக்கியமானது என்று சிலர் கேட்கக்கூடும். பொருளாதாரத்தில் நாம் முன்னேற்றமடைந்தால் மற்ற துறைகளும் தாமாகவே முன்னுக்கு வந்துவிடும் என்பதற்குச் சரித்திரஆதாரங்கள் இருக்கின்றன. எனவே, இந்தியாவின் செல்வத்தை அபிவிருத்திசெய்ய என்ன வழி என்பதையே நாம் கவனிக்கவேண்டும். செல்வம் என்றால் என்ன? தனக்கு அதிகமாகப் பயன்படும் என்று எதை மனித சமூகம் நினைக்கிறதோ, எதை மனிதசமூகம் தனக்கென்று உபயோகித்துக் கொள்ளலாமோ அதையே 'செல்வம்' என்று கூறலாம் என ஒரு பொருளாதார நிபுணர் கூறுகிறார். இதனால் செல்வத்தை நாம் அதிகப்படுத்திக்கொள்ளலாம் என்பது பெறப்படுகிறது. ஆதாவது நம்மிடத்தேயுள்ள, உண்டாக்கும் சக்தியை அதிகப்படுத்திக் கொள்வதாகும். இந்தச் சக்தியை அதிகப்படுத்திக் கொள்வதற்கு நமது சாதனங்கள், தகுந்த இடம், காலம், நாம் அநுஷ்டிக்கும் முறைகள் முதலியவைகளும் கவனிக்கப்படவேண்டும். நமது உண்டாக்கும சக்தியை அதிகப்படுத்திக்கொள்வதற்குரிய சாதனங்கள் சிலவற்றைப்பற்றிக் கூறுகிறேன்.

* * * *

நமதுநாட்டுச்செல்வம் இப்பொழுது விவசாயம், சுரங்கங்கள், கைத்தொழில்கள் முதலியவைகளால் ஆக்கப்படுகிறது. இவைகள் யாவற்றைக்காட்டிலும் விவசாயமே முக்கியமானது. இந்தியாதேசம், விவசாயம் செழித்தோங்குவதற்குரிய தேசமாகவே அமைக்கப்பட்டிருக்கிறதென்று கூறலாம். வடஇந்தியாவில் கங்கைநதி பாயும் சமவெளியில் இயற்கையான உரம் வந்து சேர்கிறது. தட்சணத்துப் பீட பூமியின் வடபாகத்தில் தப்தி-நர்மதை கணவாய்களில், பருத்தி சாகுபடி செய்வதற்கு ஏற்றவிதமாய் இடம் இருக்கிறது. மற்ற இடங்களில் நதிகள் பாய்ந்து நிலத்தைச் செழிக்கச் செய்திருக்கின்றன. மேற்கூறப்பட்ட இந்த விவசாயப்பிரதேசங்கள், இந்தியாவிலுள்ள முப்பதுகோடி ஜனங்களையும் வெளிநாடுகளில் சிலவற்றையும் போஷித்து வருகின்றன. அரிசி, கோதுமை,

பருத்தி, பார்லி, சணல், எண்ணெய்வித்துக்கள்; கரும்பு முதலியன இந்தியாவின் முக்கிய விளைபொருள்களாம். சமீபத்தில் கிடைத்த கணக்குப்படி கீழ்கண்டவாறு சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது:—

| | | |
|---|---|---|
| 1913-14 – அரிசி – டன் | ... | 28167000. |
| 1913-14 – கோதுமை – டன் | ... | 8427000 |
| 1911-12 – தேயிலை – பவுண்டு | ... | 268723000 |
| 1913-14 – சணல் – பேல் | ... | 8752000 |
| 1913-14 – பருத்தி – பேல் | ... | 5201000 |
| 1911-12 – கரும்புச் சர்க்கரை – டன் | ... | 2390400 |
| 1911-12 – எண்ணெய் வித்து – டன் | ... | 2184600 |

இந்தக் கணக்குப்படி, உலகத்திலுள்ளதேசங்களில் இந்தியா மூன்றுவதுவிவசாயதேசம் என்றும், இந்தியா, சணல் வியாபாரத்தில் அதிக பிரக்கியாதி அடைந்திருக்கிறதென்றும், கோதுமை, பருத்தி, அரிசி, முதலியவைகளில் மற்றத் தேசங்களுடன் போட்டிபோட இந்தியாவுக்குச் சக்திஇருக்கிறதென்றும் தெரிந்துகொள்ளலாம்.

இதனால் இந்தியா விவசாயத்திற்கு எவ்வளவு ஏற்றதாயிருக்கிறதென்று நன்கு புலனாகும். இன்னும் என்னென்ன சாதனங்கள் இருக்கின்றனவென்பதைக் கவனிப்போம். பூமிசாஸ்திரிகள் செய்த பரிசோதனையின் பயனாக நிலக்கரி, இரும்பு, பெட்ரோலியம் முதலிய பல இந்தியாவில் அகப்படுகின்றன. மேனாடுகள் ஒவ்வொன்றும் இரும்பு, நிலக்கரி ஆகிய இரண்டினாலேயே விருத்தியடைந்திருக்கிறதென்பது அனைவருக்கும் தெரியும். இந்தியாவிலும் அந்த இரண்டு சாதனங்களும் இருக்கின்றன. இங்கிலாந்து, அமெரிக்கா ஐக்கியமாகாணம், ஜர்மனிமுதலிய தேசங்கள் இப்பொழுதுள்ள செழிய நிலைக்குக் காரணம் இந்த இரும்பும் நிலக்கரியுமே இந்தியாவில் என்பதை நாம் கூறவேண்டுவதின்று. டாடா கம்பெனியார் இவைகளைக் கண்டு பிடித்துப் பயன்படுத்தி

வருகிறார்கள். இந்தியாவில் 1913-14ம் வருஷத்தில் 1620800 டன் நிலக்கரி உண்டாயது. 1904-05ம் வருஷத்தில் 821500 டன் நிலக்கரியே உண்டாயது. வருஷந்தோறும் இந்தியா 559190 டன் நிலக்கரி இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. 1910ம் வருஷத்தில் பதினாயிரம் பவுன் பெறுமான இரும்பே இந்தியாவில் உண்டாயது. 1912ம் வருஷத்தில் 47044 பவுன் பெறுமான இரும்பு உண்டாயது. அதிகம் உண்டானதற்கு டாடா கம்பெனியாருடைய முயற்சியே காரணம். 1905-ம் வருஷத்தில் பெட்ரோலியம் 142063846 காலன்களே உண்டாயின. 1912ம்-வருஷத்தில் 272865397 காலன்கள் உண்டாயின. இங்ஙனமே ஒவ்வொரு பொருளும் வருஷத்துக்கு வருஷம் அதிகமாக உண்டாக்கப்பட்டு வருகின்றதெனக் கூறலாம்.

* * * *

இந்தியாவில் உண்டாகும் மூலப் பொருள்களை நாம் எப்படி உபயோகிக்கிறோம் என்று சிறிது கவனிப்போம். 1912-13 ம் வருஷத்தில் 15696000 அந்தர் வெயிட்டு பருத்தி உற்பத்தியாயிருக்கிறது. அதில் 8277000 அந்தர் வெயிட்டு பருத்தியை இந்தியாவிலுள்ள மில்களே உபயோகித்துக்கொண்டிருக்கின்றன. இந்தியாவில் உற்பத்தியாகும் பருத்தியில் பாதிபாகம் ஜப்பான், ஜர்மனி, பெல்ஜியம், ஆஸ்திரியா, பிரான்சு முதலிய பிரதேசங்களுக்குச் செல்கிறது. இவைகள் அங்கே துணிகளாகவும் பிறவஸ்துக்களாகவும் செய்யப்பட்டு நமக்கு அனுப்பப்படுகின்றன. இங்ஙனமே பொன், இரும்பு முதலிய பொருள்களும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு அவைகள் சாமான்களாக நமக்குத் திரும்பி வருகின்றன. (தொடரும்)

---

# குறிப்புகள்.

**ஆயுள்-சந்தா**

நாங்குநேரித் தாலூகா போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் தேர்ச்சிபெற்ற திருடனை, செம்புலிங்கம் என்பவனைச் சுட்டுக் கொன்றவருமான திருவாளர் முத்தைய பிள்ளையவர்கள் நமது பத்

திரிகைக்கு நமது முயற்சியில்லாமலேவலிந்து ஆயுள் சந்தாதாராகச் சேர்ந்து ஆதரித்திருக்கிறார்கள். பிள்ளையவர்களின் சமூகப்பற்று பெரிதும் பாராட்டுதற்குரியது. பிள்ளையவர்கள் இன்னும் உயர் பதவிபெற்று இன்புற்று வாழ இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பின்பற்றுவார்களாக.

பிள்ளையவர்களைப்போல் சமூகக்கனவான்களில் செல்வம்பெற்ற பலராவது நமது பத்திரிகைக்கு ஆயுள் சந்தாதார்களாகச்சேர்ந்து ஆதரித்தால் பத்திரிகை மிக விரைவில் விர்த்தி யடையும். ஆயுள் சந்தாதார்களாச் சேர்தல் சந்தாதார்களுக்கும் சகாயம், நமக்கும் நன்மை. சந்தாதார்களுக்குப் பத்துவருடச் சந்தாவாகும், நமக்கு மூலதனம்போல் உதவுவதாகும். ஆனால் ஒருவர் இருவர் பதின்மர் ஆயுள் சந்தாதார்களாகச் சேர்ந்தால் நமக்கு நன்மை இல்லை. பல நூற்றுக்கணக்கான கனவான்கள் சேர்ந்தால்த்தான் நமக்கு நன்மை பயக்கும். ஆகையால் இருவருக்கும் நன்மையைக்கொடுக்கும் இவ்வுதவியை சமூக கனவான்கள் தயாள சிந்தையுடன் செய்து நம்மையும் நமது பத்திரிகையையும் ஆதரிக்க வேண்டுகின்றோம். சந்தாத் தொகை ரூபாய் இருபதை முன்பண மாகவும் [மொத்தமாக) ஒரேதடவலாகவும் அனுப்பிவைத்தல் அவசிய மென அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நகரசபையின் நாசவேலை.

தூத்துக்குடி நகரபரி பாலன சபையார் (முனிசிப்பாலிடியார்) முன்பின் யோசியாமல் ஜீவகாருண்ணிய மில்லாமல் தன்னுயிர்போல் மன்னுயிரை நினையாமல் பல்லாண்டுகளாக நாய்களை அடித்துக் கொல்லும் நாசவேலையை நடுவு நிலமையின்றி நடத்தி வருகின்றனர். கண்மூடித்தன மான காரணமொன்று சொல்லுகின்றார்கள். பல்லாண்டுகளுக்கு முன் ஓர் வெள்ளையனை ஒரு நாய் கடித்துவிட்டதாம். அதனால் அவர் நாய்களை அடித்துக் கொல்வதற்காக ஒரு பகுதித் தொகையை மூலதனமாக வைத்துச் சென்றாராம். அத்தொகையிலிருந்து நாயை அடித்துக் கொல்லும் நாசவேலையை நகரசபையார் நையாண்டு வருகிறார்களாம். ஒரு நாய் ஒருவனைக்

கடித்ததின் பொருட்டு நாய்களை எல்லாம் கொன்று நாசமாக்குவது எத்துணைப் பொருத்த முடையது. ஒருமனிதன் ஒருவனைக்குத்தியதற்காக மனிதவகுப்பையே கொன்று நாசமாக்குவதா? அந்தோ! பகுத்தறிவில்லாத மிருகவர்க்கத்தில் ஒரு மிருகம் நிகழ்த்திய குற்றத்திற்காக அவ்வினத்தையே அழித்து விடுதல் அநியாயமன்றோ. சென்ற வருடங்களிலெல்லாம் பொது மக்கள் செல்லும் ரஸ்த்தாக்களில் இயல்பாகத் திரியும் நாய்களைத் துப்பாக்கியால்சுட்டும் தடியால் அடித்தும் கொன்ற கொடுமையை இரக்க முடைய எந்தமனிதனும் சகிக்க மாட்டான். நாமும் கண்டு கண்டு ஆற்றொணாத்துன்பம் அனுபவித்தோம். இவ்வருடமோ 'சித்திரவதை செய்து கொல்லுகின்றார் க'ளென்று சொல்லுகை. எவ்வாறு எனின்? ஒரு தடியின் நுனியில் கம்பி கொண்டு சுற்றி சுருக்கிடும் வகையில் வளைத்து நாயின் கழுத்திலிட்டு கழுத்து நெறுங்கச் சுருக்கிட்டு வதைவதைக்க இழுத்துச் செல்லுகின்றார்கள். இக் கொடுமையைக் கண்டு கலங்கு கின்ற மக்கள் பலர். ஐயோ! ஐயோ! என்று அலறிச் செல்லும் மக்கள் பலர். "தன்னுயிர் நீப்பினுஞ் செய்பற்க பிரிதின்னுயிர் நீக்கும்வினை" "ஒன்றாக நல்லது கொல்லாமை" என்று அருளிய தமிழ் மறைக்குரித்தாய தமிழ்மக்கள் ஆற்றும் அரிய கொலைப்பாவம் கொடுமையினுங் கொடுமையே. இனியேனும் நகரசபையார் இத்தகைய நாசவேலையை நிறுத்தி ஆக்கவேலையை ஆரம்பிப்பார்களாக. "துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொலத் தொடங்கிய போதெல்லாம் பயந்தேன், கண்ணினாலேயோ பிறவுயிர் பதைக்கக்கண்ட காலத்திலும் பதைத்தேன், மண்ணினில் வலையுந் தூண்டிலுங் கண்ணிவகை களுங் கண்ட போதெல்லாம், எண்ணியென்னுள்ள நடுங்கிய நடுக்கம் எந்தை நின் திருவுளம் அறியும்."

மோட்டார் விபத்து.

நாளது ஜுன்மீ 2உ ஞாயிற்றுக்கிழமை காலையில் திருச்செந்தூர் லயனில் போய்க் கொண்டிருந்த மோட்டார் பஸ் ஒன்று அருகில் குழாய் பதிக்கும் குழியில் வீழ்ந்ததில் நமது சமூக மக்களில் திருவாளர் மா. பரமசிவன் பிள்ளையவர்கள், கலெக்டர் ஆபீஸ் திருவாளர் மேகலிங்கம் பிள்ளையவர்கள், வடக்கு ரதவீதி திருவாளர்.

மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள், பிள்ளையவர்கள் மனைவி முதலிய சிலரும்; கார் டிரைவர் முதலிய வேறு சிலருங்காயமடைந்து கஷ்டப்பட்டார்கள். அனைவரும் பிழைத்தது ஆண்டவனருளேயன்றி வேறில்லை. காரும்சின்னா பின்னமாய்ச் சிதறுண்டு போயிற்றாம்.

நீதி இலாக்கா நிபுணர்கள் நினைப்பார்களாக.

மோட்டார் வண்டிகளை ஒழுங்குபெற ஓட்டுவதற்கு வேண்டும் சட்டதிட்டங்கள் ஒழுங்காக அமைத்திருக்கிறது. அதனை அநுபவத்தில் நடத்திவைக்க நீதிஇலாக்கா அதிகாரிகள் கடமைப்பட்டவர்கள். மேற்கூறிய விபத்தான மோட்டார் வண்டியை நீதி இல்லாகா (போலீஸ்)அதிகாரிகள் கவனித்திருப்பார்களானால் லயனில் ஓட்ட உத்திரவு கொடுத்திருக்கமாட்டார்கள். எவ்வாறென்றால், மோட்டார்வண்டி இயல்பாக மிகப்பழமையானதாம். முன்நாள் இரவுமுழுதும் ரிப்பேர் செய்யப்பட்டதாம். அன்றியும் மோட்டார் ஓட்டுபவரால் ஏற்பட்டகுற்றமில்லையென்றும் மிஷினிலுள்ள குற்றமேயென்றும் சொல்லுகிறார்கள். ஆகையால் மோட்டார்களை மாதம் ஒருமுறையாவது நீதி இலாக்காவிலிருந்து பரிசோதித்து லயனில் ஓட்ட அனுமதிக்க இனியேனும் நினைத்து நடக்க நினைப்பூட்டுகின்றோம்.

நமது பத்திரிகை.

நமக்குக் காலக்ஷேபத்தின் பொருட்டுக் காசுக்கடைத் தொழில் இருந்தும் நம் சமூக கனவான்களின் உத்திரவை உதறிவிட ஒண்ணாதாதலாலும் நம்சமூகநிலையும் சமயநிலையும் சீர்கெட்டுச் சிதறிக்கிடக்கலிற் சிந்தைபொறாதும் நமது வேளாளனை ஆரம்பித்தோம். ஆரம்பித்த நாள் முதல் ஆண்டவன் அருளாலும் அன்பர்கள் ஆதரவாலும் வேளாளன் வெளிவந்து கொண்டிருக்கிறான். நமது „காசுக்கடைத்தொழிலைச் சரிவர கவனித்து நடத்தமுடியவில்லை; கவனித்து நடத்த முற்படுவோமானால் 'வேளாளன்' வேலை தடைப்படும். ஆகையால் வேளாளனையே நன்றாய்க் கவனித்து நடத்தக் கருதியுள்ளோம். இந்த நிலைமையில் நம்சமூகமக்கள் மிக ஆர்வத்துடன் ஆதரிக்க வேண்டியதிருக்கத் தனவந்தர்களிற் சிலரே வேளாளனை ஆதரிக்க மனமில்லாது "தற்காலம் அசக்தனாகயிருக்கிறேன்" என எழுதியும் வாபஸ் செய்தும் வருகின்றனர். முதல் இதழை வாபஸ் செய்

தார் சிலர், முதல் இதழைப் பெற்றுக் கொண்டு இரண்டாவது இத ழை வாபஸ் செய்தார் சிலர், இரண்டையும் பெற்றுக்கொண்டு சக் தியற்ற நிலைமையிலிருக்கின்றேனென்று எழுதிய தனவந்தர்கள் சிலர். ஐயோ! நம்மக்கள் மனநிலை என்னே! வருடம் ஒன்றுக்கு இ ரண்டு ரூபாய் நாள் ஒன்றுக்கு ஒரு பைசா கொடுக்கமுடியாத வே ளாளமக்களும் உண்டோ? நாம் சுமார் 700 கனவான்களுக்கு வே ளாளனை அனுப்புகிறோம். அவர்கள் அனைவரும் தகுதியுடையவர்க ளென்பதை நாம் அறிவோம். சமுகப்பற்றில்லாக்குறை தவிர கு றைவேறில்லை. சமயம் கிடைப்பின் வாபஸ் செய்தவர்களின் விபா மமறு இதழில் வெளியிடக்கருதியுள்ளோம். சமுகமக்கள் இனியே னும் வேளாளனை ஆதரித்து நம்மை ஊக்கப்படுத்துவார்களாக. ஊ க்கப்படுத்துவதென்றால் சந்தாதார்களாகச்சேர்ந்தும் விரைந்து சந் தாத்தொகையை மணியார்டர்மூலம் அனுப்பித்தருதலேயாகும்.ப-ர்.

---

# மதிப்புரை

திருக்குறட் குமரேச வெண்பா- இதன் ஆசிரியர் திருவாளர் ஜெக வீரபாண்டியனவர்கள். இந்த நூலின் சென்றமாதப் பிரதி யொன்று வரப்பெற்றோம். இந்த நூல் நாலு அடிகளால் ஆக்கப் பெற்ற வெண்பாக்களாக உளது. இரண்டு அடி திருக்குறளும் இரண்டு அடி ஆசிரியர் ஆக்கியதுமாகும். ஒவ்வொரு வெண்பாவிற் கும் பொருத்தமுள்ள கதையொன்றும் அமைந்துளது. இந்த நூ ல் மாணவர்களும் எளிதில் கற்றுக்கொள்ளும் இயல்புடையது. இ தனை தமிழ் மக்கள் ஆதரித்தல் அவசியமெனக் கருதுகின்றோம். மாதம் ஒரு முறை வெளிவருவது. வருடச்சந்தா ரூ 4-0-0. விலா சம். மானேஜர். திருவள்ளுவர் நிலையம், தூத்துக்குடி.

பாரதி:— இஃதொரு மாதப் பத்திரிகை. இதன் ஆசிரியர் திரு. R. நாராயணசாமி செட்டியார் அவர்கள். இதன் நாலாவது இதழ் நமது பார்வைக்கு வந்தது. தேசியமணங்கமழும் பல கட்டு ரைகள் காணப்படுகின்றன. பார்வைக்கு மிக அழகான முறையில்

அமைந்திருக்கிறது. பத்திரிகையை தேசமக்கள் ஆதரித்தல் அவசியம். இதன் வருடச்சந்தா ரூ 2-0-0. விலாசம் "பாரதி" ஆலயம் உத்தமபாளையம். மதுரை ஜில்லா.

ஞானஅரசு:—இஃதொரு மாதப்பத்திரிகை. இதன்பிரதி யொன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் திரு. தங்கவேலுப்பிள்ளையவர்கள். இஃது சைவசமயத்தையே அபிவிர்த்தி செய்யும் நோக்கமுடையது. சமயம் வேண்டாம் என்று சொல்லும் இக்காலத்தில் இப்பத்திரிகை அவசியமே இதன் விலாசம். 'ஞான அரசு'' காரியாலயம். பேட்டை. திருநெல்வேலி S. I. R. வருடச்சந்தா ரூ 1-0-0.

---

## நகர நடப்பு.

---

### கூட்டுறவுப் பண்டகசாலை.

ஜுன்-மீ 2உ ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணிக்கு மேஸ்ர் சி. வ. அவர்கள் கலாசாலை மேடையில் ஓர் பொதுக்கூட்டம் கூடிற்று. அப்பொழுது தேவஸ்தான கமிட்டித்தலைவர் திருவாளர் S. குமாரசாமிபிள்ளையவர்கள் தலைமையில் மதுரை வட்டம் (சர்க்கிள்) குவாப்ரேட்டிவ் டிப்டி ரிஜிஸ்ட்டரார் திருவாளர் C. D. நாயகம் பிள்ளையவர்கள் கூட்டுறவுப் பண்டகசாலையின் அவசியத்தைப்பற்றி மிக நன்றாய்ப்பேசியதோடு சந்தேகமான சில விஷயங்களுக்குத் தகுந்த சமாதானங்கூறி முடித்தார்கள். பின்னர் பல கனவான்கள் "தூத்துக்குடி கூட்டுறவுப் பண்டகசாலை" என்னும் பெயருடன் ஒரு பலசரக்கு வியாபாரம் நடத்துவதன் பொருட்டு பங்கு ஒன்றுக்கு ரூபாய் ஐந்தாக நியமித்துப் பலர் பங்காளிகளாகச் சேர்ந்திருக்கிறார்கள். இறுதியில் வந்தனத்துடனும் மங்களத்துடனும் கூட்டம் 10-30 மணிக்குக் கலைந்தது.

### திருஞான சம்பந்தர் திருவிழா.

சென்ற வைகாசி-மீ 13உ பகல் சிவாலயத்தில் அபிஷேக அலங்காரங்களும் மடாலயத்தில் மகேசுவர பூசையும் இரவு முத்

துப்பந்தல் முதலியவைகளுடன் சுவாமிகளின் திருவுருவத்தைத் திருவீதி எழுந்தருளச்செய்த காட்சியும் காண்போருள்ளம் கவர்ந்தன.

## நாட்டு நடப்பு.

அமைச்சர் அறிவிப்பது.

பேட்டையில் திருஞான சம்பந்தர் திருவருட் கழக ஆதரவில் சென்ற வைகாசி-மீ 13உ திருஞான சம்பந்தர் திருவிழா, கழகத் தலைவர் திரு. முருகாண்டி பிள்ளையவர்கள் வீட்டில் மகேஸ்வர பூஜை முதலிய சிறப்புக்களுடன் நடந்தது. மாலையில் திரு. R. S. பிள்ளையவர்கள் தலைமையில் திரு. ப. சு. சண்முகசுந்தரம் பிள்ளையவர்களாலும் காருடை, திரு. சூரியமூர்த்தியா பிள்ளை யவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன.

---

## விநோத விகட மஞ்சரி.

ராஜாராம்:— சார், உங்கள் பெயரென்ன?

மற்றவர்:— முதலியார் ரத்தின முதலியார்.

ராஜா:— பலே! உமது முதலியார் பட்டம் முன்னும் பின்னும் பிரகாசிக்கிறதே, இதென்ன விந்தை?

மற்ற:— எங்கள் ஜாதியில் அநேகம்பேர் தங்கள் பட்டமாகிய முதலியார் என்பதை நீக்கி மொட்டையாகிய பெயரை மாத்திரம் கூறும் முறையைக் கையாள்வதனால் அவர்களின் பட்டங்கள் ஆதரிப்பாரின்றி தவித்துக் கொண்டிருந்தன. அப்பட்டங்களை நாங்கள் எடுத்து முன்னாக வைத்துக்கொண்டோம். அவைகள் தான் முன்னே விளங்குவன, பின்னால் இருப்பது பழசாக எங்களிடமிருந்து வந்த பட்டம்.

---

மகன்:— தந்தையே எனக்குக் கலியாணம் செய்யப் பெண் கிடைக்கவில்லையென்று ஏன் சங்கடப் படுகிறீர்கள். தங்கை பத்மாவதியையே எனக்கு கலியாணம் செய்து விடுகிறதுதானே?

தந்தை:— சீ, மடையா! தங்கையை மணந்துகொள்வது பாவ மல்லவா! கடவுளுக்கு ஏற்குமா?

மகன்:— நீங்கள்தான் எல்லாரிடமும் தெய்வம், கோயில், புரா ணம், ஜாதி, மதம் இவைகள் எல்லாம் இல்லையாது என்று பிரசங் கம் செய்கிறீர்களே, அப்படியிருக்க, கடவுளுக்கு ஏற்குமா என்று சொல்லலாமா?

தந்தை:— ஓ! நான் பிரசங்கம் செய்வதைக் கேட்டா இப்படிச் சொல்கிறாய்? சில எண்ணங்களை மனதில் வைத்துக்கொண்டு அன் னியரை ஏய்க்கவே நான் அப்படிச் சொல்வது, கடைசியில் என க்குப்பின் நீ செல்வமாய் வாழவே பாடுபடுகிறேன்.

மகன்:— சரி சரி. அப்படியானால் நான் வாயை மூடிக்கொண் டேன்.

---

மாமியார் உடைத்தால் மண்சட்டி—
மருகி உடைத்தால் பொன்சட்டியா?
திட்டுவதற்கும் காப்பி ரைட்டா?
தன்னைக்காக்க உரிமை யில்லையா?

திராவிடன் குடியரசு இவ்விரண்டு பத்திரிகைகளும் பின்னும் அதன் வால்பிடிக்கும் சிறு பத்திரிகை இரண்டொன்றும், தமது கொள்கையை விரும்பாதவர்களையும், சேராதவர்களையும், நாயன் மார், ஆழ்வாராதியர் சமய நூல்கள் முதலியனவற்றையும் தம் மனம் போனவாறு தூஷிக்க உரிமைபெற்றிருக்கின்றன. ஏன் அப் படி தூஷிக்கிறாய் என்று மற்றப் பத்திரிகைகள் கேட்டால் புக் என்று கோபம் வருகின்றது. இதன் அர்த்தம் என்னே? திராவி டன் வகையராக்கள் மட்டில் பிறரைத் திட்ட காபிரைட் பெற்றி ருக்கிறதா வென்கிற சந்தேகம். இதில் ஒரு விசேஷம். பத்திரிகை யின் மூலம் பிறரைத் தூஷிக்கும் வழக்கத்தைப் பத்திரிகை உல கில் முன்வழிகாட்டியது எது என்பதைநேயர்கள் அறிவார்களாக சமயம் ஒக்குக. சி—ன்.

---